உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௨.] யுவ௵ ஐப்பசி௴ [பகுதி-௧௨.
Vol. XXXII. October-November 1935. No. 12.

உள்ளுறை.

செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள் (அநுபந்தம்.)
கம்பராமாயண இன்கவித்திரட்டு:- } ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார். ௩௨௫—௩௩௨
நியாயப்பிரவேசமணிமேகலை:— பத்திராசிரியர். ௩௩௩—௩௩௮
பாண்டியர்வரலாறு:- } ஸ்ரீமத். T. V. சதாசிவபண்டாரத்தார். ௩௩௯—௩௫௧
பிழையும் திருத்தமும் :— ௩௫௧
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள்:— ௩௫௨
செந்தமிழ் முப்பத்திரண்டாந்தொகுதியுள்ளுறை :—
பெருந்தொகைப் பொருட்குறிப்பகராதி: } ஸ்ரீமத். மு. இராகவையங்கார். 55-62
சிராமலைக்கோவை:— (குறிப்புரையுடன்) } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய - திராவிடவித்யாபூஷண - தாக்ஷிணாத்யகலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 25—32
மதுரைத்தமிழ்ச்சங்க வரவு செலவு கணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.
1935.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVERGAL and Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

உ

"செந்தமிழ்" நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற முப்பத்திரண்டுவருட காலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்"சேந்தமிழ்"ப்பத்திரிகையானது, பலபண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோருமுணர வெளியிடும்பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு முப்பத்திரண்டாந் தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, முப்பத்துமூன்றாந்தொகுதி தொடங்கப்பெற்று அதன் முதற்பகுதி கூடியசீக்கிரம் வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. யில் அனுப்பப்பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்துவரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

N.B—முப்பத்துமூன்றாந்தொகுதிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், நாளிது யுவ௵ ஐப்பசி௴ 25உக்குள் இச்சங்கமாபீசிற்குக் கிடைக்கும்படி மணிஆர்டரை அனுப்பிவைத்தல்வேண்டும். அதற்குள் மணியார்டர் வாராவிட்டால் வழக்கப்படி வி. பி. மூலம் பத்திரிகை அனுப்பப்பெறும். வி. பி. அனுப்பியபின்பு அதனை அங்கீகரிக்காது திருப்பியனுப்புவதால் சங்கத்துக்கு வீண் செலவு நேரிடுமாதலால் தயவுசெய்து வி. பி. யை அங்கீகரித்துச் செந்தமிழை ஆதரித்துவருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௨.] யுவ௵ ஐப்பசிமீ [பகுதி-௧௨.
Vol. XXXII. October-November 1935. No. 12.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௩௧௯-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

104 'ஆழி நெடுங்கை ஆண்டகைதன் அருளும் புகழும் அழிவின்றி
ஊழி பலவும் நிலைநிறுத்தற் கொருவன் நீயே உளை ஆனாய்!
பாழி நெடுந்தோள் வீரா! நின் பெருமைக்கேற்பப் பகை இலங்கை
ஏழு கடற்கும் அப்புறத்த தாகா திருந்த திழிபன்றோ?'

இ-ள். 'இராமபிரானுடைய ஆணையும் கீர்த்தியும் (உலகமுழுவதும் பரவிப்) பல்லூழிகாலம் நிலைபெறச்செய்தற்கு, (அநேகர் அநாவசியகமென்னும்படி) நீ ஒருவனே (போதுமானவனாய்) உள்ளாய். (ஒரு கடலுக்கே அப்பாலுள்ளதாய்) எதிரியிடமான இலங்கை (எழுகடல்களையும் தாண்டவல்ல) உன்பெருமை (விளங்குதலு)க்கு ஏற்றபடியாக எழுகடல்களுக்கும் அப்புறத்ததாயில்லாமற்போனது ஒரு (பெருங்) குறையே.'

ஆழி நெடும் கை ஆண்டகை-(அரசர்க்குரிய ஆஞ்ஞா) சக்கரத்தையுடைய (முழந்தாளளவும்) நீண்ட கையையுடைய வீரன். இதே கருத்தை 'ஆசானுபாகு' என்னும் வடமொழித்தொடர் குறித்தல் காண்க. அருள் - ஆணை. சூளாமணிப்படலத்தில் 'எத்தும் வென்றி' என்ற ௩௧-ஆம் பாட்டில் 'இராமன் ஆணை' யென்று

*

பொருள்பட 'மன் அருள்' என்பது வருதல் காண்க. உளே - உள்ளாய். பாழி - வலிமை. பகை இலங்கை - 'பகைப்புலம்' என்னும் எதிரியிடமான இலங்கைத்தீவு. இழிவு - தாழ்வு - குறைவு. 'ஒழிந்த திகழ்வன்றோ' பிரதிபேதம்.

'ஆழி நெடுங்கை ஆண்டகை' என்ற சொற்றொடர், இராமன் அரசாளாமையினால், தசரதனைக் குறித்ததாகக் கூறுவாருளர். அத்தொடர் உபசாரமாக இராமனைக்குறித்ததாகக்கொள்ளலாம்; உண்மையாக இராமனைக்குறித்ததெனலுமாம். இதற்கு நியாயம் யாதெனில், தசரதசக்கரவர்த்தியின் ஆஞ்ஞாசக்கரம் கைகேயி கொண்ட வரத்தால் பரதனுடையதானதை அவன் இராமனிடம் ஏற்பிக்க, 'இதை எனதாக நீகொண்டு என் வனவாசகாலம் முடியுமளவும் அரசாள்வாயாக' என்று இராமன் தனதான சக்கரத்தைப் பரதனிடம் திரும்ப ஏற்பித்திருத்தலால், இராமனைச் சீதை 'ஆழி நெடுங்கை ஆண்டகை' என்றாள் என்பது. இதனால் அத்தொடர் இராமனைக்குறித்ததாகக்கொள்பவர் 'ஆழி' என்பதற்குச் 'சக்கரம்' என்ற பொருள்பொருந்தவில்லையென்றுகருதி 'மோதிரம்' என்று பொருள்கூறுவது இன்றியமையாததன்றாம். இராமன் கையில் 'சக்கரரேகை'யுண்மைபற்றி, 'ஆழி நெடுங்கை ஆண்டகை' எனப்பட்டானெனலுமாம். முன் அநுமான், சுக்கிரீவனைநோக்கி, இராமனுக்குச் 'சங்கு சக்கரக் குறியுள தடக்கையில் தாளில்' என்று கூறியிருப்பது காண்க. (நட்புக்கோட்படலம் எகூ).

'அநுமானே! இராமபிரான் வெறுத்தாரை அவன் ஆணைப்படி அடக்கித் தண்டித்து அவனுக்குப் பிரதாபமும் அவன் விரும்பினார்க்கு இதம்செய்து அவனுக்குக் கீர்த்தியும் உண்டாக்கி அவ் இருவகைப் புகழ்களும் ஏழேழுலகத்தும் ஊழியூழிகாலத்தும் நிலைபெற்றுநின்று நிலவும்படிசெய்ய நீ ஒருவனேபோதும். உன் துணை உள்ளதாக, இலக்குமணன் சுக்கிரீவன்முதலியோர் துணையும்வானர

சேனைத்துணையும் மிகையாய் அநாவசியகமாமென்னும்படியான பெருமையை நீ உடையாயென்பதை உன் இயற்கைப்பேருருவங் கண்டு தெளிவாகத் தெரியலானேன். உன் பெருமைக்குத்தக்கபடி இலங்கை ஏழுகடல்களுக்கும் அப்பாலாயிருந்திருந்தால், அத்தனை கடல்களையும் தாண்டி அந்த லங்கையை அடைந்திருப்பாய். அப்போது, உலகத்தோர், உன்னை ஏழுகடல் தாண்டுவோனென மதித்திருப்பார். அதற்கிடமில்லாமல், நீ ஒருகடலே தாண்டுவோனென மதிக்கப்படும்படி இந்த இலங்கை ஒருகடலுக்கே அப்பாலுள்ளதாய் ஏழுகடல்களுக்கும் அப்புறப்பட்டதாயில்லாமற்போனது இரங்குதற்குரியதாய் உன்பெருமையைக் குறைப்பதாயுள்ளது' என்று சீதை அநுமானை வியந்து புகழ்ந்தாளென்பது கருத்து.

இதன்முன் அநுமான்பெருமைக்கு அவன் கடலைக்கடந்தான் என்பது இழிவென்று கூறிப் புகழ்ந்தவள், இப்போது அவன் தாண்டிய கடல் ஏழாயில்லாமல் ஒன்றாயிருந்தது அவன் பெருமைக்கு இழிவு என்று புகழ்ந்தாள்.

இராம லக்குமணருக்குத் துணையான அநுமான்பெருமையை அறியுமுன், 'இவ்வளவு பெரிய கடலை நம்மை மீட்கவருவார் எவ்வாறுகடப்பார்? இது சிறிதாயிருந்ததில்லையே?' என்று வருந்தியிருந்த சீதை, அவன்பெருமையை அறிந்தபின், அக்கடல் பெரிதாயிருப்பதுபோலப் பலவாயும் இல்லாமற்போயிற்றேயென்று இரங்கினளென்று இந்தக் கவியிலும், அவன்பெருமைதெரியுமுன், எண்ணிறந்த இந்த இராக்கதப்பெருங்கூட்டத்தை, எத்துணைப் பராக்கிரமமுடையரேனும் இருவரேயான இராமலக்குமணர் எவ்வாறு வெல்வாரென்று ஏங்கியிருந்தவள், அவன்பெருமை தெரிந்தபின் 'அவ் இராக்கதரனைவரும் எம்மாத்திரம்? இமைப்பொழுதில் அழிந்தொழிவர்' என்று எக்களித்தாளென்று 'மின்னேரெயிற்று' என்ற 106-ஆம் கவியினும் இனிது புனைந்துரைத்திருக்கும் அத்தியற்புத கற்பனைத்திறம் பெரிதும் பாராட்டத்தக்கது.

105 'அறிவும் ஈதே, உரு ஈதே, ஆற்றல் ஈதே, அரும்புலத்தின்
செறிவும் ஈதே, செயல் ஈதே, தேற்றம் ஈதே, தேற்றத்தின்
நெறியும் ஈதே, நினைவீதே, நீதி ஈதே, நினக்கென்றால்,
வெறியரன்றே! குணங்களான்விரிஞ்சன்முதலாம்மேலானோர்.'

இ-ள். 'உனக்கு, விவேகம் இதுவே, சொரூபம் இதுவே, வல்லபம் இதுவே, அடக்குதற்குரிய ஐம்புலன்கள் அடங்கியிருக்குந்தன்மை இதுவே, மனத்தெளிவு இதுவே, மனத்தெளிவுக்குத் தக்க ஒழுக்கம் இதுவே, எண்ணம் இதுவே, நீதி இதுவே என்றால், (மனிதர்க்கும் அவரினும் உயர்ந்த தேவர்க்கும் அவர்களுள் உயர்ந்த தேவாதிபர்க்கும்) மேலான பிரமன்முதலியோர் (எல்லாச் சிறந்த குணங்களும் ஒருங்கே உடைய உன்னோடு ஒப்பிடப்படுங்கால்)ஒரு குணமுமில்லாததன்மையரே.'

ஆற்றல் - வலி. செறிதல் - அடங்குதல் (தமிழகராதி). தேற்றம் - தெளிவு. நெறி - ஒழுக்கம். வெறியர் - வெறுமையுடையார் - இல்லாதவர். விரிஞ்சன் - பிரமன்.

'இது' என்பதன் விகாரமாகிய 'ஈது,' நான் (சீதை)கண்ட தன்மையுடையது என்ற பொருளை உணர்த்தியது.

'ஈது,' 'ஈது' என வந்த ஒவ்வொன்றுக்கும், இத்தன்மையது என்று கண்டவர் காட்டக் காணாதவர் கண்டறியக்கூடியதேயன்றிக் கண்டவர் சொல்லக் காணாதவர் கேட்டறியக்கூடாததாய்த் தனக்கு உயர்ந்ததில்லாததேயன்றி ஒத்ததுமில்லாத பெருமையுடையதாய் உள்ளதென்று பொருள்விரித்துரைக்கலாம்.

106 'மின்னேர் எயிற்று வல்அரக்கர் வீக்கம் நோக்கி, வீரற்குப்
பின்னே பிறந்தா னல்லதோர் துணைஇ லாத பிழைநோக்கி,
உன்னை நின்றே உடைகின்றேன், ஒழிந்தேன் ஐயம். உயிர்உயிர்த்தேன்.
என்னே! நிருதர் என்ஆவர்! நீயே எங்கோன் துணையென்றால்'

இ-ள். 'வலிய அரக்கர்பெருக்கத்தைக்கண்டு, இராமபிரானுக்குத் தம்பி (ஒருவனே) யன்றி வேறொருதுணையுமில்லாத குறை

பாடுகருதி, (இருவர், இத்தனை இராக்கதரை எப்படி வெல்லப் போகிறார்களென்ற சந்தேகம்கொண்டு,) சிந்தனையி லாழ்ந்து (மத் தெறிதயிர்போல) மனமுடைந்துகொண்டிருந்த யான் சந்தேகம் (முழுதும்) நீங்கினேன். (இத்துணைப் பெருமையுடைய) நீயே எங்கோன் துணையாயிருக்கும்போது இவ் இராக்கதர் எம்மட்டு! (அலட்சியமான அற்ப அளவினரென்றபடி), யாதாவர்! (இருந்த இடந்தெரியாதபடி அழிந்தொழிவ ரென்றபடி).'

எயிறு - பல். வீக்கம் - மிகுதி. பிழை - குறைவு (தமிழக ராதி). நோக்கி - கருதி ('அறனோக்கி' என்ற குறளுரை). என்னே இகழ்ச்சிக்குறிப்பு. என் - யாது. 'இவனே எங்கோன்' பிரதிபேதம்.

'என்னே' என்பதற்கு 'இது என்ன ஆச்சரியம்' என்றும், '(எனக்கு இனி) என்ன குறையுளது?' என்றும் பொருள்கூறுவர்.

'நீயே' என்ற பாடங்கொள்ளாமல் 'இவனே' என்ற பாடங் கொண்டால்,-அநுமானது இயற்கைப் பெருவடிவங்கண்டு வியந்து அவனை முன்னிலைப்படுத்திப் புனைந்து புகழ்ந்துகொண்டிருந்த சீதை, தன் சிறைமீட்சியும் பகைவர்வீழ்ச்சியும் பற்றிய நம்பிக்கை ஓங்க மகிழ்ச்சி மேலிட்டதனால், அவன் எதிரே யிருப்பதை யெண்ணாமல், தான் சொல்வதை அவன் கேட்கவேண்டுமென்று கருதாமல், அவன் கேட்கும்படியாகத் தனக்குத்தான் கூறியவைக ளாக இக்கவியிலும் அடுத்தகவியிலும் கூறப்பட்டிருப்பவைகளைக் கொள்ளல்வேண்டும்.

107 'மாண்டே னெனினும் பழுதன்றே, இன்றே, மாயச் சிறைநின்றும்
மீண்டேன், என்னை ஒறுத்தாரைக் குலங்க ளோடும் வேர்அறுத்தேன்,
பூண்டேன் எங்கோன் பொலங்கழலும், புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டேன்' என்று மனம்மகிழ்ந்தாள் திருவின் முகத்துத் திருஅன்னாள்.

இ-ள். 'இப்போதே, இறந்தேனானாலும் குற்றமில்லை. (இராக் கதராது) வஞ்சகச் (செயலாலான) சிறையினின்றும் மீண்டேனாய்

விட்டேன், என்னை வருத்திய அரக்கர்வருக்கம் அனைத்தையும் அடியோடும் அழித்தேனுய்விட்டேன், எம்பெருமான் பொன்னடிகள் (என்முடிமேற்) சூடினேனுய்விட்டேன், இனிப் புகழேயன்றி இழிவான பழி யாதும் தீண்டப்படவேமாட்டேன்' என்று கூறிக் குதுகலித்தாள், (எவளென்ருல்,) இலக்குமியினது (உறுப்புக்களிற் சிறந்த) முகத்தின் அழகு (உருவெடுத்தாற்) போன்றவளாகிய சீதை.

ஒறுத்தல் – வருத்துதல். இன்று – இப்போது (தமிழ்ச் சொல்லகராதி); 'இன்றே' என்பது, 'மீண்டேன்' என்பதனோடன்றி 'மாண்டேன்' 'வேரறுத்தேன்' 'பூண்டேன்' என்பவைகளோடும் பொருந்தும்படிநிற்றல் கவனிக்கத்தக்கது. பொலம் - அழகு. கழல் - கால். முந்திய 'திரு' இலக்குமியையும் பிந்திய 'திரு' அழகையும் குறித்தன.

இந்தப் பாட்டில் 'மாண்டேன்' என்பது முதலாகத் 'தீண்டேன்' என்பது இறுதியாக உள்ள பகுதியை 'இன்றே, என்னை ஒறுத்தாரைக் குலங்களோடும் வேரறுத்தேன், மாயச்சிறைநின்று மீண்டேன், எங்கோன் பொலங்கழலும் பூண்டேன், புகழேயன்றிப் புன்பழியும் தீண்டேன், மாண்டேனெனினும் பழுதன்றே' என்று பொருத்திப் பொருள்கொள்ளலும் பொருந்தும். அப்பொருளாவது:

'(உன் துணையுடைமையால், இராமலக்குமணர் இராக்கதரை அழிப்பது திண்ணமாதலால்,) என்னை வருத்திய இராக்கதரை இப்போதே அவர்கள் வமிசங்களுடன் நிர்மூலமாக்கினேனுனேன், (இராக்கதர் அழிவு என் சிறை அழிவாதலால்) இப்போதே சிறையினின்று மீண்டேனுனேன், (சிறைமீண்டேனுதலால்) இப்போதே (பிரிந்த என் நாயகனைத் திரும்ப அடைந்து) என் நாயகனது பொன் அடிகளை (என் முடிமேல்) அணிந்தேனுனேன், (என் வாழ்க்கையின் இலட்சியங்களான சிறைமீட்சியும் என் நாயகன் திருவடி

அடைதலும் சித்தித்தனவாதலால்) இப்போதே இறந்துபோனேனுஞலும் குற்றமில்லை' என்று சீதை கூறினுள் என்பது.

இவ்வாறு எதிர்காலநிகழ்ச்சிகளை இறந்தகாலத்தாற்கூறியது தெளிவுபற்றி.

அநுமான் தன்னைத் தாழ்த்திக்கூறல்.

[அநுமான், தன்பெருமையைச் சீதை பாராட்டியதற்கு நன்றியறிகுறியாகவும் அவள்கொண்ட ஊக்கம் தளர்தலின்றி வளர்தற்பொருட்டுத் தான் கூறப்போவதற்குப் பூர்வாங்கமாகவும் அவளுடையபாதங்களில்விழுந்து பணிந்து 'இராமபிரானுக்கு என்னைப்போல ஏவினபணிகளைச்செய்யும் அடியவரான வானரசேனுபதிகள் கடல்மணல்போலக் கணக்கற்றவர்கள் இருக்கின்ருர்கள். அடியேன் அவருள் கடையேன்' என்றுகூறி வானரப்படைமிகுதியை வருணிக்கின்ருன்:

வானரப்படைப் பெருமை.

108 'வெள்ளம் எழு பத்துளதால், வீரன் சேனை! இவ்வேலைப்
பள்ளம் ஒருகை நீர் அள்ளிக் குடிக்கச் சாலும் பான்மையதோ!
கள்ள அரக்கர் கடிஇலங்கை காணு தொழிந்த தாலன்றே,
உள்ள துணையும் உளதாவ தறிந்த பின்னும் உளதாமோ?'

இ-ள். 'இராமபிரானுடைய வானரப்படை, எழுபது வெள்ளமென்னும் (மிகப் பெரிய) இலக்கமுள்ளது! (அந்தப் படைவீரர் ஆளுக்கு) ஒருகைந்நீர் அள்ளிக் குடிக்க, ஆழமான கடல்நீர் (அத்தனையும்) காணுமோ? காணுது! (அவர்களுக்கு இலங்கையிருக்குமிடம் தெரிந்திருந்தால், அழித்திருப்பார்கள்.) இலங்கை (அழியாததாய்) இருக்குமளவும் இருப்பதாகுவது (அது இருக்குமிடம்) தெரியப்படாதொழிந்ததனுலேயே: தெரியப்பட்டபின்னும் (அழிக்கப்படாமல் அரைக்கணமும்) இருப்பதாமோ? (இருக்கவேமாட்டாதென்றபடி).' [என்று அநுமான் கூறினுன்.]

வெள்ளம் - ஓரெண். 'பள்ளவேலை' யென இயைக்க. வேலை - கடல்; ஆகுபெயராய்க் கடல்நீரை உணர்த்தியது. 'வேலைப்பள்ளம்' என்பதை இருக்கிறபடியே கொண்டு, 'பள்ளம்' ஆகுபெயராய்ப் பள்ளத்துள்ள நீரை உணர்த்தியதெனலுமாம். நிந்தனைப்படலத்தில் 'பள்ளநீர்' என ஒருகவி தொடங்கல் காண்க. சாலும்பான்மையதோ - போதிய தகுதியுடையதோ. கள்ளம் - வஞ்சகம். கடி - காவல். துணை - அளவு. 'வெள்ள மேழுப துளதன்றே,' 'குடிக்கப் போதும்' என்பனவும் பாடங்கள்.

அநுமான், கடல்மணல்போலக் கணக்கிறந்தவரெனப் படைத் தலைவர்மிகுதியைப் பாரித்துரைத்தா னென்றும், அதனினும் அதிக நயத்துடன் விநோதமுமாகக் கடல்நீர்முழுதும் ஆளுக்கொரு கைந்நீரள்ளிக்குடித்தற் காற்றாது (நீராயிருந்த கடல் நிலமாய்விடும்) என்று படையாள்கள்மிகுதியை விதந்துரைத்தானென்றும் கூறிய கவிசாதுரியம், கழிபேருவகை விளைப்பதாயுள்ளது.

உருக்காட்டுபடலம் முற்றிற்று.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

நியாயப்பிரவேச மணிமேகலை.

[௨௪௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

(3) சபக்ஷைகதேசவிருத்தி விபக்ஷவியாபி.

இனி நியாயப்பிரவேசத்தில் சபக்ஷைகதேசவிருத்தி விபக்ஷவியாபி வருமாறு.

1. 𑌸𑌪𑌕𑍍𑌷𑍈𑌕𑌦𑍇𑌶𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌯𑌥𑌾।
𑌅𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑍀𑌯𑌕𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑍋𑌽𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍॥

இதன்பொருள்: 'சபக்ஷைகதேசவிருத்தி விபக்ஷவியாபி என்னும் ஏதுப்போலி எங்ஙனமெனில், "சத்தம் முயற்சியாற் பண்ணப்படுவதன்று; அநித்தியமாதலால்"' என்பது.

இதனுள், 'சத்தம் முயற்சியாற் பண்ணப்படுவதன்று; அநித்தியமாதலால்' என்பது உதாரணம்.

[இங்கு இவ்வேதுப்போலியின் இலக்கணம் சொல்லப்படவில்லை. மணிமேகலையில் முதற்கண் இதன் இலக்கணம் சொல்லிப் பின்பு உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது.]

இனி இவ்வுதாரணம் விளக்கப்படும்.

2. 𑌅𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑍀𑌯𑌕𑌃 𑌪𑌕𑍍𑌷𑌃।
𑌅𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑌾𑌕𑌾𑌶𑌾𑌦𑌿 𑌸𑌪𑌕𑍍𑌷𑌃।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌕𑌦𑍇𑌶𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑌾𑌦𑍌 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇𑌽
𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂; 𑌨𑌾𑌕𑌾𑌶𑌾𑌦𑍌॥

இதன்பொருள்: 'முயற்சியாற் பண்ணப்படாதது பக்ஷம்; இதற்கு மின்னல் முதலியனவும் ஆகாசமுதலியனவும் சபக்ஷம்; அவற்றுள் (ஏகதேசத்தில்) மின்னல்முதலியவற்றுள் உள்ளது அநித்தியத்துவம்; மற்றொருபகுதியாகிய (ஏகதேசத்தில்) ஆகாயமுதலியவற்றுள் அநித்தியத்துவம் இல்லை' என்பதாம்.

இதனால் எடுத்துக்கொண்ட ஏது சபக்ஷைகதேசவிருத்தி யாதல் காட்டப்பட்டது.

இதனுள், 'முயற்சியாற் பண்ணப்படாதது பக்ஷம்' என்றது, 'சத்தம் முயற்சியாற் பண்ணப்படுவதன்று, அநித்தமாதலின்' என்று கீழேகாட்டிய உதாரணத்துள் 'முயற்சியாற்பண்ணப்படுவதன்று' என்ற பிரதிஜ்ஞாவாசகத்தின்பயனிலைப்பொருள் என்றவாறு.

இங்கு, நித்தமோ? அநித்தமோ? என்று ஐயுற்றுத்துணியும்பொருளுக்கிடமாயிருக்கும் எழுவாய்ப்பொருளாகிய சத்தத்தைப் பக்ஷமென்னுது, அதனேடொற்றுமையுடைய பயனிலைப்பொருளாகிய 'முயற்சியாற்பண்ணப்படாதது' என்பதைப் பக்ஷமென்று கூறியிருப்பது தருக்கநூல்வழக்கோடு வேறுபட்டிருக்கிறது. மற்றும், இந்நூலுள், பக்ஷநிரூபணம்பண்ணுமிடங்களிலெல்லாம் இவ்வாறே வருவது நோக்கத்தகும். இவ்வாறு கூறுவது, சபக்க விபக்கப் பொருள்களை எளிதின் உணர்தற் பொருட்டுப்போலும்.

மணிமேகலையில் இவ்வாறன்றித் தருக்கநூல்வழக்கின்படி பக்க வசனத்தின் எழுவாய்ப்பொருளே பக்கமென்று வழங்கப்பட்டிருக்கிறது; இதுவும் ஒரு வேறுபாடு.

இனி, அவ்வேது விபக்கவியாபியாதல் காட்டப்படும்.

3. அப்ரயத்நாநந்தரீயகஃ பக்ஷஃ।
அஸ்ய கடாதிர் விபக்ஷஃ।
தத்ர ஸர்வத்ர கடாதௌ வித்யதே அநித்யத்வம்॥

இதன்பொருள்: 'முயற்சியாற் பண்ணப்படாதது பக்ஷம்; இதற்கு, முயற்சியாற்பண்ணப்படுவனவாகிய குடமுதலியன விபக்ஷம்; அக்குடம் முதலிய விபக்ஷங்களிலெல்லாம் உள்ளது அநித்தியத்தன்மை' என்பதாம்.

இதனால் அநித்தியத்தன்மையாகிய இவ்வேது விபக்ஷவியாபியாயுமிருத்தல் காட்டப்பட்டது.

இனி இவ்வேது அனைகாந்திகமாமாறு காட்டப்படும்.

4. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌦𑌪𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑍍𑌘𑌟𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑍇𑌣𑌾
𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌂।
𑌕𑌿𑌂 𑌘𑌟𑌵𑌦𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑍀𑌯𑌕𑌃 𑌶𑌬𑍍𑌦𑌃?।
𑌆𑌹𑍋𑌸𑍍𑌵𑌿𑌦𑍍 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑌾𑌦𑌿𑌵𑌦𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍
𑌅𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑍀𑌯𑌕 𑌇𑌤𑌿॥

இதன்பொருள்: (சபக்ஷைகதேசவிருத்தியாயும் விபக்ஷவியாபியாயுமிருத்தலால்) 'இதுவும் மின்னல் குடங்களின் ஒப்புமையால் அனைகாந்திகமாயிற்று; எங்ஙனமெனில், சத்தம் குடம்போல் அநித்தமாதலால் முயற்சியாற் பண்ணப்படுவதோ? அல்லது, மின்னல்முதலியனபோல் அநித்தமாதலால் முயற்சியாற் பண்ணப்படாததோ? என்று ஐயுறுதற்கிடனாதலால்.'—என்பதாம்.

இதனுள், சபக்ஷைகதேசவிருத்தியாதல் நெருப்புண்டு எனத் துணிதற்கண் புகையுடைமைபோல நல்லேதுவாதற்குரியதே. ஆயினும், அது விபக்ஷவியாபியாகிய துஷ்டஹேதுவின்கண் இருத்தலால் அதுவும் குற்றமாகக் கருதப்பட்டது. இது, மற்றுமுள்ள ஏகதேசவிருத்தி ஏதுப்போலிகளுக்கும் ஒக்கும்.

இனி, மணிமேகலையில் இவ்வேதுப்போலிநிரூபணம் செய்யத் தொடங்கி முதலில் அதன் இலக்கணம் கூறப்படுகிறது:—

"சபக்கைக தேச விருத்தி விபக்க
வியாபி யாவ தேதுச் சபக்கத்
தோரிடத் தெய்தி விபக்கத் தெங்கு
முண்டா தலாகும்" (௨௩௧—௩௪)

என்றது இவ்வேதுப்போலியின் இலக்கணம் கூறியவாறு. [இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

இதனுள், 'சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபியாவது' என்றது அப்பெயர்பெற்ற ஏதுப்போலியின் இலக்கணமாவது என்றவாறு. 'ஏது' என்றது ஏதுப்பொருளே. 'சபக்கத்து ஓரிடத்தெய்தி' என்றது துணிபொருள் வெளிப்பட்டுள்ள இடத்துள் ஏகதேசத்துிலுள்ளதாய்க்கொண்டே என்றவாறு. 'விபக்கத்து எங்குமுண்டாதல்'—துணிபொருளில்லாத இடமெல்லாம் உள்ளதாயிருத்தல். 'ஆவது', 'ஆகும்' என்பன முறையே தம்மையேற்ற பெயர்கள் எழுவாயும் பயனிலையுமாயியையும் குறிப்பு வெளிப்படநின்றன.

இனி இவ்வேதுப்போலி ஒருதாரணங்காட்டி விளக்கப்படும்.

அது,

"............சத்தஞ் செயலிடைத்
தோன்று தாகு மநித்த மாகலின்,
என்றால் அநித்த மென்ற வேதுச்
செயலிடைத் தோன்று மைக்குச் சபக்க
மின்னினு மாகா சத்தினு மின்னி
னிகழ்ந்தா காசத்திற் காணு தாகலி
னநித்தங் கடாதியி னுத்தலிற் கடம்போ
லழிந்து செயலிற் றேன்றுமோ மின்போ
லழிந்து செயலிற் றேன்று தோவெனல்" (உ௩௪—௪௨)

என்பது.

இதனுள், 'சத்தம் செயலிடைத்தோன்று தாகும்' என்றது பக்கவசனம். இப்பக்கவசனத்துள் சொல்லப்பட்ட துணிபொருள் செயலிடைத்தோன்றுமை; (முயற்சியாற் பண்ணப்படாமை என்றபடி).

'அநித்தமாகலின்' என்றது ஏதுவசனம்.

'அநித்தமென்ற வேது' என்றது அநித்தத்தன்மையாகிய ஏதுப்பொருள் என்றவாறு. ஈண்டு அநித்தத்தன்மை ஆகுபெயரால் அநித்தமெனப்பட்டது.

'செயலிடைத்தோன்றுமைக்கு' என்றது செயலிடைத்தோன்றுமை (முயற்சியாற்றோன்றுமை) யாகிய துணிபொருட்குரிய என்றவாறு.

'சபக்கமின்னினும் ஆகாசத்தினும்' என்றது அத்துணிபொருளாகியசெயலிடைத்தோன்றுமை(முயற்சியாற்றோன்றுமை)வெளிப்பட்டுள்ள சபக்கமாகிய மின்னலும் ஆகாசமுமாம் இவற்றுள் என்றவாறு.

'மின்னினிகழ்ந் தாகாசத்திற் காணுதாகலின்' என்றது அவ்வநித்தத்தன்மையாகிய ஏதுப்பொருள் மின்னலும் ஆகாசமுமாகிய சபக்கத்துள் ஏகதேசமாகிய மின்னலின்கண் உள்ளதாயும், மற்றும் ஓர் ஏகதேசமாகிய ஆகாசத்தில் இல்லதாயுமிருத்தலால் என்றவாறு. இதனுல் ஏது சபக்ஷைகதேசவிருத்தியாதல் காட்டப்பட்டது.

இனி விபக்கவியாபியாதல் காட்டப்படும்.

'அநித்தம் கடாதியினெத்தலின்' என்றது அநித்தமாதல் என்னும் ஏதுப்பொருள் செயலிடைத்தோன்றுமைக்கு விபக்கமாய்ச் செயலிடைத்தோன்றுவனவாகிய குடமுதலிய காரியப் பொருள்களிலெல்லாம் வியாபித்திருத்தலால் என்றவாறு. ஈண்டு 'ஒத்தல்' என்றது ஏகதேசத்துள்ளதாயும் ஏகதேசத்தில்லதாயும் உள்ள விஷமநிலை (வியநிலை) யின்றி எல்லாவற்றிலும் உள்ளதாகும் சமநிலையையுணர்த்தலால் வியாபித்திருத்தல் எனப் பொருளுரைக்கப்பட்டது. இதனுல் ஏது விபக்கவியாபியாதல் காட்டப்பட்டது.

இவ்வேது சபக்ஷைகதேசவிருத்தியாதல் குற்றமில்லையாயினும், அது விபக்கவியாபியாயுமிருத்தலாற் குற்றமுடையதாயிற்று.

இனி இக்குற்றமுடைமையாலுண்டாம் பயன் கூறப்படும்.

'கடம்போ லழிந்து செயலிற் றோன்றுமோ மின்போலழிந்து செயுலிற்றோன்றுதோ எனல்' என்றது, சத்தம் அழிதலால் அவ்வா

றழிவுடைய குடம்போற் செயலால் (முயற்சியால்) பண்ணப்பட்ட தாகத்தோன்றுமோ? அல்லது சத்தம் அழிதலால் அவ்வாறழி வுடைய மின்னற்போலப் பண்ணப்பட்டதாகாது இயல்பானே தோன்றுவதோ? என்று ஐயுறுதற்கிடனும் என்றவாறு.

'அழிந்து' என்னும் செய்தெனெச்சங்களிரண்டும்ஏதுப்பொரு ளுணரநின்றன.

இவ்வேதுப்பொருள், சபக்கைகதேசவிருத்தியாயிருந்து கொண்டு வாதிக்கு அநுகூலமாகத் துணிபொருளின் உண்மையை யும், விபக்கவியாபியாயிருந்துகொண்டு எதிரிக்கு அநுகூலமாகத் துணிபொருளின் இன்மையையும் தோற்றுவித்தலால், சத்தம் செயலிடைத்தோன்றுமோ? செயலிடைத்தோன்றாதோ? என்று ஐயுறவையுண்டாக்குதல்பற்றி அநைகாந்திகமாயிற்று.

இவ்வேது வாதிக்கு அநுகூலமாமாறு:— 'சத்தம் செயலிடைத் தோன்றாதது, அநித்தமாதலால்; யாது யாது அநித்தமாயுள்ளது, அது அது செயலிடைத்தோன்றாதது; மின்னல்போல,—என்பது.

எதிரிக்கு அநுகூலமாமாறு:—'சத்தம் செயலிடைத்தோன்றுவது, அநித்தமாதலின்; யாது யாது அநித்தமாயுள்ளது, அது அது செயலிடைத்தோன்றுவது; குடம்போல'—என்பது.

இவ்வாற்றான் வாதிகூறும் சபக்கத்திலிருக்கும் ஏதுவே எதிரி கூறும் பிரதிபக்ஷத்திலும் உள்ளதாயிருத்தல் வியபிசாரமாயிற்று.

[தொடரும்]

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

பாண்டியர் வரலாறு.

[௯௨௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

வரகுணவர்மன்:—மாறவர்மனது முதல்மகனுகிய இவ்வேந்தன் கி. பி. 862–ஆம் ஆண்டில் முடிசூட்டப்பெற்றான் என்று மதுரைஜில்லாவில் ஐவர்மலையிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. இவன் சடையவர்மன் என்னும் பட்டத்துடன் அரசாண்ட வேந்தனுவன். இவனைக் 'குரைகழற்கா லரைசிறைஞ்சக் குவலயதலந் தனதாக்கின - வரைபுரையு மணிநெடுந்தோள் மன்னர்கோன் வரகுணவர்மன்' என்று சின்னமனூர்ச்செப்பேடுகள் புகழ்ந்து கூறுகின்றன. பாண்டியர்கட்கும் பல்லவர்கட்கும் நடைபெற்று வந்த போர் இவன்காலத்தேதான் ஒருவாறு முடிவெய்தியது என லாம்.

பழைய சோழமன்னர்களின் வழியினனும் விசயாலயன் மகனுமாகிய முதலாம் ஆதித்தசோழன் என்பான் பல்லவர்கள் கைப்பற்றியாண்டுவந்த சோழமண்டலத்தைத் திரும்பத் தான் கைப்பற்ற எண்ணித் தக்ககாலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனன். கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்துமைல் தூரத்தில் மண்ணியாற்றங்கரையிலுள்ள திருப்புறம்பியம் என்னுமிடத்தில் வரகுணபாண்டியனுக்கும் பல்லவர்கட்கும் கி. பி. 880–ஆம்ஆண்டிற்கணித்தாக ஒரு பெரும்போர் நடைபெற்றது. இப்போரிற்பல்லவர்கட்குத் துணையாக வந்திருந்த கங்க அரசனுகிய முதலாம் பிருதிவிபதி என்பான் பாண்டியன் வரகுணவர்மனுற் கொல்லப்பட்டான். * பல்லவவேந்தனுகிய அபராஜிதவர்மன் வெற்றிபெற்றும் எக்காரணம்பற்றியோ தொண்டைமண்டலத்திற்கு ஓடிவிட்டான். இச்சமயத்தில்தான் முதலாம் ஆதித்தசோழன் தஞ்சைமாநகரில் முடிசூட்டப்பெற்றுச் சோழமண்டலம் முழுவதையும் ஆட்சிபுரியும் பெருமையை எய்தினன். பல்லவர்களது ஆட்சி ஒழிதற்கும்

---

* South Indian Inscriptions Vol. II No. 76.

சோழர்களது ஆட்சி மீண்டும் சோழமண்டலத்தில் நிலைபெறுதற்கும் காரணமாயிருந்த இத்திருப்புறம்பியப்போர், தமிழகவரலாற்றிற் குறித்தற்குரிய ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். இப்போரில் இறந்த முதலாம்பிருதிவிபதியின் கோயில் ஒன்றும் உதிரம் படிந்த தோப்பு ஒன்றும் திருப்புறம்பியத்தில் இன்றும் உள்ளன. இவை முற்காலத்தில் அங்கு நிகழ்ந்த பெரும்போரை உணர்த்துதற்குரிய அடையாளங்களாகும்.

வரகுணவர்மன்காலத்தில் நிகழ்ந்த பிறசெய்திகளுள் ஒன்றும் தற்காலத்திற் புலப்படவில்லை; அன்றியும், இவன் எத்துணை ஆண்டுகள் பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்தனன் என்பதும் இதுபோது அறியக்கூடவில்லை; இவனுக்குப்பின்னர் இவனது இளவலாகிய பராந்தகபாண்டியன் பட்டத்திற்குவந்தனன் என்பதுமாத்திரம் தெரிகிறது.‡

பாரந்தகபாண்டியன்:—இவன் மாறவர்மன் பரசக்கரகோலாகலனது இரண்டாம்புதல்வனுவன். இவனுடைய தமையனுகிய வரகுணவர்மன் இறந்தபின்னர், இவன் அரியணையேறினுன். இவன் அரியணையேறியது கி. பி. 880–ஆம் ஆண்டிற்குப்பின்னர் நிகழ்ந்திருத்தல்வேண்டும். அவ்வாண்டை இதுபோது அறிந்துகூறுதற் கியலவில்லை. இவன், தன் தமையனைப்போல் சடையவர்மன் என்ற பட்டமுடையவனுய் வாழ்ந்துவந்தனன். இவன் சோழமண்டலத்திலுள்ள இடவை என்னும் நகர்மீது படையெடுத்துச் சென்றனன் என்று திண்டுக்கல் தாலூகாவிலுள்ள இராமநாதபுரக் கல்வெட்டு ஒன்று உணர்த்துகின்றது. இடவை என்பது சோழமண்டலத்தில் இராசேந்திரசிங்கவளநாட்டில் மண்ணிநாட்டில் உள்ளது என்று தஞ்சாவூரிலுள்ள இராசராசேச்சுரக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள திருவிசலூர் வேப்பத்தூர், திரைலோக்கியமாதேவிச் சதுர்வேதிமங்கலம், திருக்குடித்திட்டை, இடையார்நல்லூர் முதலான ஊர்கள் இம் மண்ணிநாட்டில் உள்ளனவேயாகும். எனவே, இவற்றிற்கருகில்தான்

‡ சின்னமனூர்ச் செப்பேடுகள். (Annual Report on South Indian Epigraphy for 1907)

இடவையு மிருத்தல்வேண்டும். இடவைநகரின்மீது பராந்தகபாண்டியன் படையெடுத்துச் சென்றமைக்குக் காரணம் புலப்படவில்லை.

இவ்வேந்தன் கொங்கர்களைப் போரில்வென்றும், பெண்ணுகட நகரையழித்தும் பல தேவதானங்களும் பிரமதேயங்களும் விட்டுப் புகழ்பெற்றனன் என்று சின்னமனூர்ச்செப்பேடுகள் உணர்த்துகின்றன. இவனுக்கு வீரநாராயணன் என்ற பெயரும் உண்டு. இவனுடைய பட்டத்தரசி வானவன்மாதேவி என்பாள். இவ்விருவருக்கும் பிறந்த புதல்வன் மூன்றும் இராசசிம்மபாண்டியனாவன். பராந்தகபாண்டியன் கி. பி. 900–க்கு அணித்தாக இறந்தனன். இவனைப்பற்றிய பிறசெய்திகள் தற்காலத்திற் புலப்படவில்லை.

ஆறும் அதிகாரம்.

கி. பி. 900 முதல் கி. பி. 1190 வரையில் ஆண்ட பாண்டியர்கள்.

மூன்றும் இராசசிம்மபாண்டியன்:—இவ்வேந்தன் சடையவர்மன் பராந்தகனுடையபுதல்வன். இவன் தாய் வானவன்மாதேவி என்பாள். இவன் கி. பி. 900த்தில் பட்டம் எய்தினன் என்று தெரிகிறது. சின்னமனூர்ச்செப்பேடு இம்மன்னனது பதினாறும் ஆண்டில் அளிக்கப்பெற்றதாகும்.* இது பாண்டியர்வரலாற்றை ஆராய்வார்க்குப் பெரிதும் பயன்படுவதொன்றும். தற்காலத்திற் சின்னமனூர் என்று வழங்கும் நற்செய்கைப்புத்தூர்க்கு மந்தரகௌரவமங்கலம் எனப் பெயரிட்டு அதனை இவ்வரசன் பிரமதேயமாக அளித்தசெய்தியை இச்செப்பேடு உணர்த்துகின்றது. அன்றியும், இவன் உலப்பிலிமங்கலத்தில் எதிர்த்த பகைஞர்களைவென்றமையும், கொடும்பாளூர்மன்னனது பெரும்படையைப் புறங்காட்டியோடச்செய்தமையும், வஞ்சிமாநகரிற் பெரும்போர்புரிந்தமையும் தஞ்சைமன்னனை நாவற்பதியில் தோல்வியுறச்செய்தமையும் இச்செப்பேட்டால் நன்கு அறியப்படுகின்றன. இவன் 'எண்ணிறந்த பிரமதேயமும், எண்ணிறந்த தேவதானமும், எண்ணிறந்த பள்ளிச்சந்தமும், எத்திசையும் இனிதியற்றிப்' புகழ்பெற்றனன் என்பதும், இராசசிகாமணி, சீகாந்தன், மந்தரகௌரவமேரு முதலான பட்டங்களையுடையவனாயிருந்தனன் என்பதும் ஈண்டு அறிந்துகொள்ளுதற்குரியனவாகும்.

---

* South Indian Inscriptions Vol. III. part IV. Ins. No 206.

இனி, சோழமண்டலத்தில் கி. பி. 907-ல் முடிசூடிக்கொண்ட முதற்பராந்தகசோழன், அவனது ஆட்சியின் மூன்றும் ஆண்டில், 'மதுரைகொண்ட கோப்பரகேசரி' என்று கல்வெட்டுக்களிற் குறிக்கப்பெற்றுள்ளான். இதனுல் இம் முதற்பராந்தகசோழன் கி. பி. 910-ல் மூன்றும் இராசசிம்மபாண்டியனேடு போர்புரிந்து அவனை வென்றிருக்கவேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. தோல்வியுற்ற இராசசிம்மபாண்டியன் இலங்கைமன்னனுகிய ஐந்தாம் காசிபனைத் தனக்குத் துணைப்படையனுப்புமாறுகேட்டுக்கொண்டனன். அவ்வேந்தனும் பாண்டியனது வேண்டுகோட்கிணங்கித் தன் படைத்தலைவனிடம் சிறந்த யானைகளும், குதிரைகளும், வீரர்களும் அடங்கிய பெரும்படையொன்றை அனுப்பினுன். இலங்கைப்படையும் பாண்டிப்படையும் ஒருங்குசேர்ந்து முதற்பராந்தகசோழனேடு போர்புரிதற்குப் புறப்பட்டன. வேளூர் என்னுமிடத்திற் பெரும் போர்நடைபெற்றது.* அவ்விருபடைகளும் பராந்தகன்படையுடன் போர்புரியும் ஆற்றலின்றிப் புறங்காட்டியோடத்தலைப்பட்டன. இராசசிம்மன் இம்முறையும் தோல்வியுற்ருன். எனவே பாண்டிநாடு பராந்தகச்சோழனது ஆட்சிக்குள்ளாயிற்று. இது நிகழ்ந்தது கி. பி. 919-ஆம் ஆண்டாகும். இச்செய்திகளுள், சில இரண்டாம்பிருதிவிபதியி்ன் உதயேந்திரச் செப்பேட்டிலும் சொல்லப்பட்டுள்ளன.†

தனக்குரிய நாட்டை இழந்த இராசசிம்மபாண்டியன் சிங்களத்திற்குச்சென்று அந்நாட்டரசனது உதவிபெறுமாறு ஆங்குத் தங்கியிருந்தனன்; தன் நாட்டைப்பெறுவதற்கு அவ்வேந்தன் உதவாமைகண்டு, அங்குத் தங்கியிருப்பதால் ஒருபயனும் இல்லை என்பதை நன்குணர்ந்து, தன்முன்னேர்களிடமிருந்து தனக்குக்கிடைத்துள்ள சுந்தரமுடியை அம்மன்னனிடத்தில் வைத்துவிட்டு, தன் தாய் வானவன்மாதேவியின் பிறந்தகமாகிய கேரளநாட்டிற்குச் சென்று அங்கு வசித்துவந்தான். பின்னர் இவனைப்பற்றிய செய்திகள் புலப்படவில்லை. ஆகவெ, பாண்டியரது ஆட்சி இம்மன்னன் காலத்தேதான் மிகவும் தாழ்ந்தநிலையையடைந்து வீழ்ச்சியெய்திற்று. பாண்டிநாடும் சோழரது ஆளுகைக்குள்ளாயிற்று. திருநெல்

---

* S. I. I Vol. III. Inscription. No. 99. இதிற்குறிக்கப்பெற்றுள்ள வேளூர் எவ்விடத்தில் இருக்கின்றது என்பது தெரியவில்லை.

† South Indian Inscriptions Vol. III. Inscription No. 65.

வேலி, மதுரை, இராமநாதபுரம் முதலான சில்லாக்களிலும் திருவாங்கூர் இராச்சியத்தின் சிலபகுதிகளிலும் காணப்படும் முதற்பராந்தகசோழன் கல்வெட்டுக்கள் இவ்வுண்மைகளை நன்குவிளக்குங்கருவிகளாக உள்ளன.

வீரபாண்டியன்:—இவ்வேந்தன் இராசசிம்மபாண்டியன் புதல்வன் என்று மதுரைசில்லா திருப்புடைமருதூரிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.‡ இவன் கல்வெட்டுக்கள் திருநெல்வேலி, இராமநாதபுரம் சில்லாக்களிலும் திருவாங்கூர் இராச்சியத்தின் தென்பகுதியிலும் உள்ளன. அன்றியும், இவன் ஆட்சியின் ஒன்பது பத்தாம் ஆண்டுகளின் கல்வெட்டுக்கள் மதுரைஜில்லா திருமங்கலந் தாலூகாவிலுள்ள கீழமாத்தூர்க்கோயிலிலும் காணப்படுகின்றன.* இவற்றால், இவன் தனக்குரிய பாண்டிமண்டலத்தைச் சோழமன்னர்களிடமிருந்து கைப்பற்றி ஆட்சிபுரிந்திருக்கவேண்டுமென்பது வெளியாகின்றது. அவன் இங்ஙனம் பாண்டிமண்டலத்தைக் கைப்பற்றியது முதற்பராந்தகசோழனது ஆட்சியின் இறுதிக்காலத்திலாதல் அவன்மகனாகிய கண்டராதித்தசோழன் ஆட்சியின் தொடக்கத்திலாதல் நிகழ்ந்திருத்தல்வேண்டும். அந்நாட்களில் இராட்டிரகூட மன்னனாகிய மூன்றாங் கிருஷ்ணதேவன் சோழநாட்டின்மீது படையெடுத்துவந்து உள்நாட்டிற் குழப்பம் உண்டுபண்ணியமையால், சோழமன்னர்கள் தம் ஆளுகையின்கீழ் வைத்துக்கொண்டிருந்த பாண்டிமண்டலத்தைப் பாதுகாக்கமுடியாத நிலையில் இருந்தனர். காலங்கருதிக்கொண்டிருந்த வீரபாண்டியனும் முடிசூடிக்கொண்டு பாண்டிநாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டான். இதற்கேற்ப, முதற்பராந்தகசோழனுக்குப் பின்னர் அரசாண்ட கண்டராதித்தன், அரிஞ்சயன் என்ற இரண்டு சோழமன்னர்கல்வெட்டுக்கள் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் முதலான சில்லாக்களிற் காணப்படவில்லை. ஆனால், வீரபாண்டியன் கல்வெட்டுக்கள்மாத்திரம் அவ்விடங்களிலுள்ளன என்பது முன்னரே விளக்கப்பட்டது. எனவே, வீரபாண்டியன் பாண்டிநாட்டில் முடிமன்னனாகவீற்றிருந்து சோழமன்னர்க்குத் திறைசெலுத்தாது அதனையாட்சிபுரிந்துவந்தனனென்பது இனிதுபெறப்படுகிறது.

‡ Inscription No. 128 of 1905.

* Inscriptions 624 and 625 of 1926.

இனி, வீரபாண்டியன்கல்வெட்டுக்களுள் பல, 'சோழன் தலைகொண்ட கோ வீரபாண்டியற்கு ஆண்டு'* என்று தொடங்குகின்றமையின் ஒரு சோழமன்னனை இவன் போரிற் கொன்றிருத்தல் வேண்டுமென்பது நன்குபுலப்படுகின்றது. முதற்பராந்தகசோழனுக்குப்பிறகு அரசாண்ட சோழமன்னருள் ஒருவனும் அவனது மகனுமாகிய அரிஞ்சயன் என்பான், தன்ஆட்சியின் தொடக்கத்திற் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்சென்று அங்கு வீரபாண்டியனாற் கொல்லப்பட்டிருத்தல்வேண்டுமென்பது உய்த்துணரப்படுகின்றது. ஆனால் வீரபாண்டியனாற்கொல்லப்பட்டவன் இவ்வரிஞ்சயன்புதல்வனும் முதல் இராசராச சோழன்தந்தையுமாகிய சுந்தரசோழனயிருத்தல்வேண்டுமென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இன்னோர்கொள்கைக்குச் சில சான்றுகள் முரணாக உள்ளன. சுந்தரசோழனுக்குப் 'பொன்மாளிகைத்துஞ்சினதேவர்'† என்னும் பெயருண்டு என்பது சில கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. பொன்மாளிகை என்பது சோழமன்னரது ஆட்சிக்காலங்களிற் காஞ்சிமாநகரில் இருந்த அரண்மனைகளுள் ஒன்று.‡ ஆகவே, இச்சுந்தரசோழன் காஞ்சிமாநகரிலிருந்ததோர் அரண்மனையில் இறந்திருக்கவேண்டும்; வீரபாண்டியனாற்கொல்லப்பட்டிருத்தற்கு இடமில்லை.

அன்றியும், கி. பி. 964-ல் சுந்தரசோழன் சேவூர் என்னுமிடத்தில் வீரபாண்டியனைப்போரில்வென்றானென்றுதெரிகிறது.$ தஞ்சைசில்லாவிலுள்ள சில கல்வெட்டுக்கள், இச்சோழமன்னனைப் 'பாண்டியனைச் சுரம் இறக்கினபெருமாள்' என்று குறிப்பதும் இவன் வீரபாண்டியனோடு போர்புரிந்து அவனை வென்றசெய்தியையே வலியுறுத்துகின்றது. எனவே, வீரபாண்டியன் சுந்தரசோழனைப் போரிற்கொன்றனன் என்று கூறுவது எவ்வாற்றானும் பொருத்தமுடையதன்று.

---

* Travancore Archaeological Series Vol III. part I.

† South Indian Inscriptions Vol. II. Ins. No 6. (pp. 72 & 74).

‡ do do Vol III. Ins No 142.

$ Leidan Grants of Rajaraja Chola I.

இனி, அரிஞ்சயனது கல்வெட்டுக்கள் சோழநாட்டில் யாண்டுங் காணப்படாமையே, அவன் முடிசூடிய சில திங்களில் இறந்திருத்தல்வேண்டுமென்பதை உணர்த்துகின்றது. இவ்வரிஞ்சயனது பெயரனாகிய இராசராசசோழன் மேற்பாடி என்னும் ஊரில் 'அரிஞ்சயேச்சுரம்'* என்ற ஒரு கோயில் எடுப்பித்து அதற்கு நிபந்தங்களும் விட்டிருப்பது இவன் போரில் உயிர்துறந்தகாரணம் பற்றியே போலும். இது, தற்காலத்திற் சோழேச்சுரம் என்று வழங்குகின்றது. ஆகவே, வீரபாண்டியனாற் கொல்லப்பட்ட சோழமன்னன் முதலிராசராசசோழன்பாட்டனாகிய அரிஞ்சயனேயாதல்வேண்டும்.

இனி, சுந்தரசோழன் முதல்மகனும் அரிஞ்சயன்பெயரனுமாகிய ஆதித்தகரிகாலன் என்பான், 'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன்'† என்று பல கல்வெட்டுக்களிற் குறிக்கப்பட்டிருத்தலால் இவன் வீரபாண்டியனைப் போரிற் கொன்றிருத்தல் வேண்டுமென்பது வெளியாகின்றது. அரிஞ்சயன்மனைவி, கொடும்பாளூர்க் குறுநிலமன்னனாகிய தென்னவன் இளங்கோவேள் மகள் என்று ஒரு கல்வெட்டு அறிவிக்கின்றது.‡ எனவே, வீரபாண்டியன் அரிஞ்சயனைக் கொன்றகாரணம்பற்றி ஆதித்தகரிகாலனும் கொடும்பாளூர்மன்னனும் ஒருங்குசேர்ந்து வீரபாண்டியனோடு போர்புரிந்து அவனைக் கொன்றிருத்தல்வேண்டுமென்பது திண்ணம். இந்நிகழ்ச்சி ஆதித்தகரிகாலனது இரண்டாம்ஆண்டுக் கல்வெட்டிற் குறிக்கப்பெற்றிருத்தலால் வீரபாண்டியன் கி. பி. 972-க்கு முன்னரே இறந்தனன்போலும்.

இவ்வீரபாண்டியற்குப் பின்னர், பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கம்வரையில் ஆட்சிபுரிந்த பாண்டியர்கள் சோழர்களுக்குத் திறைசெலுத்தும் சிற்றரசர்களாக இருந்தமையின் அவர்கள் வரலாற்றை அறிந்துகொள்ளுதற்குரிய கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிற் கிடைக்கவில்லை. முதல் இராசராசசோழன், முதல் இராசாதி

---

* S. I. I. Vol. III. Inscriptions 15, 16 & 17.

† S. I. I. Vol. III. Ins. No. 14.

‡ S. I. I. Vol. III. Ins. No. 96.

ராசசோழன் முதலான சோழமன்னர்கள் கல்வெட்டுக்களில் அவர்களால் வென்றடக்கப்பட்டவர்களாகக் குறிக்கப்பெற்றுள்ள பாண்டியர்பெயர்கள்மாத்திரம் காணப்படுகின்றன. அத்தகைய பாண்டியர்வரலாற்றையும் அக் கல்வெட்டுக்களின் துணைகொண்டு தொடர்பாக அறிய இயலவில்லை. இதுகாறும் ஆராய்ந்துகண்ட சில செய்திகளே அடியில் எழுதப்பெறுவன.

அமரபுயங்கன்:—இப்பாண்டியன் முதல் இராசராசசோழனால் வென்றடக்கப்பெற்றவன் என்று திருவாலங்காட்டுச்செப்பேடு கூறுகின்றது.* இவ்வேந்தன் யாருடையபுதல்வன் என்பதும் எப்போது பட்டத்திற்குவந்தனன் என்பதும் புலப்படவில்லை. முதல் இராசராசன் கி. பி. 995–ல் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச் சென்றபோது பாண்டியனும் சேரனும் ஒருங்குசேர்ந்து அவனை எதிர்த்தனர். அவன் அவ்விருவரையும் வென்று நாட்டைவிட்டு ஓடுமாறுசெய்ததோடமையாது, பாண்டிநாட்டையும் சேரநாட்டையும் கைப்பற்றி, அவற்றிற்கு 'இராசராசமண்டலம்' என்று பெயரிட்டுத் தன் ஆட்சிக்குள்ளாக்கினான். அதுமுதல், இராசராசனுக்குப் 'பாண்டிகுலாசனி' என்ற பெயரும் வழங்குவதாயிற்று. இராசராசன்கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிலும் சேரநாட்டிலும் உள்ளன.† இங்ஙனம் இராசராசசோழனாற் பாண்டிநாட்டைவிட்டு ஓடுமாறு துரத்தப்பெற்றவன் இவ்வமரபுயங்கனேபோலும்.

முதல் இராசராசசோழன்மகனாகிய முதல் இராசேந்திரசோழன் தன் ஆட்சியின் தொடக்கத்தில் தன்புதல்வர்களுள் ஒருவனுக்குச் 'சோழபாண்டியன்' என்ற பட்டமளித்துப் பாண்டிநாடாகிய இராசராசமண்டலத்திற்கு அரசப்பிரதிநிதியாக மதுரையில் வீற்றிருந்து ஆண்டுவருமாறு அனுப்பினான்.‡ இவன் இங்ஙனஞ் செய்தமைக்குக்காரணம் தோல்வியுற்ற பாண்டியர் சிறிது வலிமையெய்தியவுடன் சோழர்க்குத் திறைசெலுத்தாது முரண்பட்டுவந்தமையேயாம். சோழமன்னரதுபிரதிநிதிகளாகச் 'சோழ

---

* S. I. I. Vol. III. No. 205

† Inscriptions Nos. 2, 6, 7, 8 and 84 of 1927; Travancore Archaelogical Series Vol. I, II & III

‡ South Indian Inscriptions Vol. III. No. 205

பாண்டியர்' என்ற பட்டத்தோடு மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்தார், முதல் இராசேந்திரசோழன்மகன் சுந்தரசோழபாண்டியன், விக்கிரமசோழபாண்டியன், பராக்கிரமசோழபாண்டியன் என்போர்.* இவர்கள் கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிலும் சேரநாட்டிலும் காணப்படுகின்றன. எனவே, சோழபாண்டியரது ஆளுகை சேரநாட்டிலும் நிலைபெற்றிருந்ததென்பது நன்கு துணியப்படும்.

மானாபரணன், வீரகேரளபாண்டியன், சுந்தரபாண்டியன், விக்கிரமபாண்டியன், வீரபாண்டியன்:—இவர்கள், முதல் இராசாதிராசசோழன்காலத்திற் பாண்டிநாட்டிலிருந்த மன்னர்களாவர். சோழர்களால் அனுப்பப்பெற்ற அரசப்பிரதிநிதிகளுக்கு அடங்காது உள்நாட்டிற் கலகம்விளைத்தகாரணம்பற்றி இவர்களோடு இராசாதிராசசோழன் போர்நிகழ்த்துவது இன்றியமையாததாயிற்று. அப்போரில் மானாபரணபாண்டியனும் வீரகேரளபாண்டியனும் கொல்லப்பட்டனர்; சுந்தரபாண்டியன் தோற்றோடி முல்லையூரில் ஒளிந்துகொண்டான்; விக்கிரமபாண்டியன் ஈழமண்டலத்திற்கு ஓடிவிட்டான். வீரபாண்டியன் என்பான் இராசாதிராசசோழனால் கி. பி. 1048-ல் கொல்லப்பட்டானென்று கோலார்சில்லாவில் மிண்டிக்கல் என்னுமிடத்திலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.† இச்செய்தி இராசாதிராசசோழனது திருக்களர்ச் செப்பேட்டிலும் குறிக்கப்பட்டுளது$. இங்குக் குறிக்கப்பெற்ற பாண்டியர் ஐவர் வரலாற்றையும்உணர்த்தக்கூடிய கருவிகள் கிடைக்கவில்லை.

சோழநாட்டில் வீரராசேந்திரசோழன் இறந்தபின்னர் அதிராசேந்திரன் ஆட்சிபுரியும் நாட்களில், உள்நாட்டிற் பெருங்கலகம் உண்டாயிற்று. அதில் அதிராசேந்திரன் கொல்லப்பட்டான். அக்காலத்திற் சோழமண்டலம் பெருங்குழப்பத்திற்குள்ளாகி அரசனின்றி அல்லலுற்றிருந்தது. எனவே, சோழமன்னர்பிரதிநிதியாகப் பாண்டிமண்டலத்தில் ஆண்டுவந்த சோழபாண்டியரது ஆட்சியும் அங்கு நடைபெறாமல் ஒழிந்தது. இச்சமயத்தில் பாண்டியர் ஐவரும் இழந்தநாட்டைக் கைப்பற்றி அமைதியுடன் கி. பி. 1084 வரை ஆண்டுவந்தனர்.

---

* Annual Report on Epigraphy for 1916-1917

† Epigraphia Indica Vol. IV. No. 31.

$ South Indian Inscriptions Vol. III. No. 208.

பிறகு, சோழமண்டலத்தின் அரசுரிமையை எய்தி அதன் முடிமன்னனாக வீற்றிருந்து ஆட்சிபுரியும் பெருமையடைந்த முதற்குலோத்துங்கசோழன் கி. பி. 1084ல் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்சென்று அங்கு ஆண்டுகொண்டிருந்த பாண்டியர் ஐவரையும் போரில்வென்று அந்நாட்டைக் கைப்பற்றி அங்குவெற்றித் தூண்களும் நிறுவினான். இச்செய்தி முதற்குலோத்துங்கசோழன் *மெய்க்கீர்த்தியில் நன்குவிளக்கப்பட்டிருப்பதோடு அவன்மீது சயங்கொண்டாரால் பாடப்பெற்றுள்ள கலிங்கத்துப்பரணியிலும்† கூறப்பட்டுளது. இங்ஙனம் முதற்குலோத்துங்கசோழன்பால் தோல்வியுற்ற பாண்டியர் ஐவரும் யாவர் என்பது தற்காலத்திற் புலப்படவில்லை. ஆயினும், சடையவர்மன் சீவல்லபன் என்பான் குலோத்துங்கன்காலத்திலிருந்த பாண்டியர் ஐவருள் ஒருவனாக இருத்தல்கூடுமென்று ஆராய்ச்சிவல்லார் கருதுகின்றனர்.‡

மாறவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி பராக்கிரமபாண்டியன்:— இவன் குலோத்துங்கன்காலத்திலிருந்த பாண்டியருள் ஒருவன் என்று தெரிகிறது. இவனைப்பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

சடையவர்மன் பராந்தகபாண்டியன்:— இவன் குலோத்துங்கசோழன் இறுதிக்காலத்திலும் விக்கிரமசோழன் ஆளுகையின் முற்பகுதியிலும் பாண்டிநாட்டிலிருந்தவன். இவன் பராக்கிரமனுக்கு எம்முறையினன் என்பது இதுபோது தெரியவில்லை. இவனுடைய மெய்க்கீர்த்தி குமரிமுனைக்கருகிலுள்ள பகவதிகோயிலில் உளது. அம்மெய்க்கீர்த்தியால் இவன் சேரமன்னனை வென்று திறைகொண்டதும், காந்தளூர்ச்சாலையிற் கலமறுத்ததும், விழிஞம் என்ற நகரைக் கைப்பற்றியதும், தெலுங்கவீமனது தென்கலிங்கநாட்டைத்

---

* 'தன்பெருஞ் சேனை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருதப் போர்க்களத் தஞ்சி
வெரிநளித் தோடி அரணெனப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து'

(குலோத்துங்கன் I. மெய்க்கீர்த்தி)

† 'விட்ட தண்டெழ மீனவர் ஐவருங்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலுநீ'

(கலிங்கத்துப்பரணி–368)

‡ The Pandyan Kingdom by Mr. K. A. Neelakanta Sastri.

தன்னடிப்படுத்தியதும், திருவனந்தபுரத்தெம்பெருமானுக்கு மணி விளக்குகள் பத்து அமைத்ததும், $கூபகத்தரசன்மகளை மணந்து கொண்டதும், அளப்பனவும் நிறுப்பனவும் ஆகிய கருவிகளிற் கயல்முத்திரை பொறித்ததும் அறியப்படுகின்றன. இவன் வென்றதாகச் சொல்லப்பட்டுள்ள தெலுங்கவீமனை விக்கிரமசோழனும் வென்றான் என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது. ஒரேகாலத்திலிருந்த இவ்விருவேந்தரும் ஒருங்குசேர்ந்து தெலுங்கவீமனை வென்றிருத்தல்வேண்டுமென்று கருதலாம்.

மாறவர்மன் சீவல்லபன்:—இவன் மேலேகுறித்துள்ள பராந்தக பாண்டியனுக்கு என்னமுறையினன் என்பது புலப்படவில்லை. இவன் கி. பி. 1132-ல் பட்டத்திற்கு வந்தவன். திருவாங்கூர் இராச்சியத்தையாண்ட விரரவிவர்மன் என்பான் இவனுக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாகவிருந்தனன்.* இவ்வேந்தன் கல்வெட்டுக்கள் திருநெல்வேலிசில்லாவிற் பலஇடங்களில் உள்ளன.

சடையவர்மன் குலசேகரபாண்டியன்:— இவன் மாறவர்மன் சீவல்லபன்புதல்வன்; கி. பி. 1161-ல் முடிசூடியவன். இவன் திருநெல்வேலியிலிருந்து பாண்டிநாட்டின் தென்பகுதியை ஆட்சி புரிந்துகொண்டிருக்கும் நாட்களில், பராக்கிரமபாண்டியன் என்பான் மதுரையிலிருந்து பாண்டிநாட்டின் வடபாதியை ஆண்டுவந்தனன். இவ்விருவேந்தர்களுக்கும் எக்காரணம்பற்றியோ பகைமையுண்டாயிற்று. குலசேகரபாண்டியன் மதுரைமாநகர்மீது படையெடுத்துச்சென்று அதனை முற்றுகையிட்டான். பராக்கிரமபாண்டியன் இலங்கைமன்னனாகிய பராக்கிரமபாகுவைத் தனக்கு உதவி புரியுமாறு பெரும்படையொன் றனுப்பவேண்டினன். அவ்வேந்தனும் இலங்காபுரித்தண்டநாயகன் தலைமையில் ஒரு பெரும்படை அனுப்பினான். அத் துணைப்படை பாண்டிநாட்டிற்குவருவதற்குள் குலசேகரபாண்டியன் பராக்கிரமபாண்டியனையும் அவன் மனைவி மக்களையும்பிடித்துக் கொன்றுவிட்டான்.† இலங்காபுரித்தண்டநாயகன் தன்படையுடன் பாண்டிநாட்டிற்குட் புகுந்து பல இடங்களிற்

$ கூபகம்—தென்திருவாங்கூர் இராச்சியம்

* The Pandyan Kingdom By Mr. K. A. Neela Kanta Sastri.

† சோழவம்ச சரித்திரம்.

கொள்ளையிட்டுக் குலசேகரபாண்டியனைப் புறங்காட்டியோடச்செய்தனன். இந்நிலையில் இலங்காபுரித்தண்டநாயகனுக்கு உதவிபுரியுமாறு சகத்விசயதண்டநாயகன் என்பான் இலங்கையிலிருந்து ஒரு பெரும்படையுடன் வந்துசேர்ந்தனன். இவ்விருதலைவர்களும் குலசேகரனைப் போரில்வென்று அவனாற் கொல்லப்பட்ட பராக்கிரமபாண்டியன்புதல்வனாகிய வீரபாண்டியற்கு மதுரையில் முடிசூட்டுவிழா நடத்தினர். போரில் தோல்வியுற்று மதுரைமாநகரை விட்டோடிய குலசேகரபாண்டியன் அந்நாளிற் சோழமண்டலத்தில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த இரண்டாம் இராசாதிராசசோழனைத் தனக் குதவிபுரியுமாறு வேண்டினன். அச்சோழமன்னனும் பல்லவராயனை திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பியின் தலைமையிற் பெரும்படையொன்றை யனுப்பினன். பல்லவராயன் பாண்டிநாட்டிற்குச் சென்று இலங்கைப்படையோடு போர்புரிந்து அதனைத் தோல்வியுற்றோடுமாறுசெய்து, பிறகு குலசேகரபாண்டியனை வருவித்துப் பாண்டிநாட்டை யாண்டுவரும்படி ஏற்பாடு செய்தான்.

இச்செய்திகள் காஞ்சிமாநகரத்தையடுத்துள்ள ஆரப்பாக்கத்துக் கல்வெட்டிலும் இலங்கைச்சரித்திரமாகிய மகாவம்சத்திலும் கூறப்பட்டுள்ளன.† இவ்விரண்டிற்கும் சிற்சில வேறுபாடுகளும் உண்டு. அன்றியும், திருவாலங்காட்டிலுள்ள இரண்டாம் இராசாதிராசசோழனது 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டும்‡ மாயூரத்திற்கு அண்மையிலுள்ள பல்லவராயன்பேட்டையிற் காணப்படும் அவனது 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டும்$ இவ்வரலாற்றை நன்குணர்த்துகின்றன. இங்ஙனம் சோழமன்னன் உதவியினாற் பாண்டியநாட்டைப்பெற்று ஆட்சிபுரிந்துவந்த குலசேகரபாண்டியன் எத்தனை ஆண்டுகள் அரசாண்டனன் என்பது தெரியவில்லை; ஆயினும் கி. பி. 1180 வரை ஆண்டிருத்தல்கூடும்.

மாறவர்மன் விக்கிரமபாண்டியன்:—இவன் சடையவர்மன் குலசேகரபாண்டியன் மகன்; அவன் இறந்தபின்னர்ப் பாண்டிநாட்டின் அரசுரிமை எய்தியவன். இவனது ஆளுகையின் தொடக்கத்தில், முன்னர்த் தோல்வியுற்றோடிய வீரபாண்டியன் சிங்களப்படையின் துணைகொண்டு மீண்டும் போர்புரியத்தொடங்கினான். இராசாதி

---

† Inscription No 20 of 1899. ‡ Inscription No. 465 of 1905.
$ Inscription No 433 of 1924.

ராசசோழனுக்குப்பின்னர் முடிசூடிய மூன்றாங்குலோத்துங்க சோழன் இவ்விக்கிரமனுக்குத் துணைப்படையனுப்பினான். இம்முறை நிகழ்ந்த போரிலும் சிங்களப்படை புறங்காட்டியோடவே, வீரபாண்டியன் தோல்வியுற்றான்.* சோழநாட்டுப்படைத்தலைவனாகிய அம்மையப்பன் இராசராசசம்புவராயன் மதுரைமாநகரைக் கைப்பற்றி அங்கு வெற்றித்தூண் நிறுவினான். சோழர்க்குத் திறை செலுத்திவந்த இவ்விக்கிரமபாண்டியனிடம் இராச்சியத்தை ஒப்பித்து ஆண்டுவருமாறுசெய்து அப்படைத்தலைவன் சோழநாட்டிற்குத் திரும்பினான். இது கி. பி. 1182–ஆம் ஆண்டிற்குமுன் நிகழ்ந்திருத்தல்வேண்டும்.

வீரபாண்டியன் மற்றும் ஒருமுறை மூன்றாங் குலோத்துங்க சோழனோடுநெட்டூரிற்போர்புரிந்து தோல்வியுற்றுத் தன்சுற்றத்தாரோடு திருவாங்கூர் இராச்சியத்திற்கு ஓடிவிட்டான்.† பிறகு இவனைப்பற்றிய செய்திகள் தெரியவில்லை. விக்கிரமபாண்டியன் சில ஆண்டுகள் அமைதியுடன் ஆட்சிபுரிந்து கி. பி. 1190–ஆம் ஆண்டில் விண்ணுலகடைந்தான். [தொடரும்.]

T. V. சதாசிவ பண்டாரத்தார்,

தமிழ்ப்பண்டிதர், வாணாதுறைஹைஸ்கூல், கும்பகோணம்.

பிழையும் திருத்தமும்.

செந்தமிழ் 32–ஆம் தொகுதியின் 11–ஆம்பகுதியில் (யுவ–வருடபுரட்டாசிப்பகுதியில்) உகூஎ–ஆம் பக்கத்து 6ஆம் வரியில் 'முப்பத்தொன் றீரொன்பான்' என்றிருப்பதை 'முப்பத்தொன் றீரிருபான்' எனவும், 21–ஆம்வரியில் 'ஐந்துவயதுக்குமேல்' என்றிருப்பதை 'ஐந்துவயதுமுதல் எனவும், உகூஅ–ஆம்பக்கத்து 5–ஆம் வரியில் 'இதனால் ஐந்துவயதிலிருந்து இருபத்தெட்டுவருடகாலமே' என்றிருப்பதை 'இதனால் ஏழுவயதிலிருந்து முப்பத்துநான்கு வருடகாலமே' எனவும், ௩௦௫–ஆம் பக்கத்து 24–ஆம் வரியில் 'அநுரூபத்தை' என்றிருப்பதை 'அணுரூபத்தை' எனவும் திருத்திக்கொள்க.

---

* Inscription I of 1899 (திருக்கொள்ளம்பூதூர் - மூன்றாங் குலோத்துங்கசோழனது 4–ஆம் ஆண்டுக் கல்வெட்டு).

†. The Pandyan Kingdom by Mr. K. A. Neela Kanta Sastri.

1935-ஃ செப்டம்பர்மீ 21௳ (யுவ-ஃ புரட்டாசிமீ 5௳) காலை 11-15-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முகராஜேசுவர நாகநாதஸேதுபதிமஹாராஜா அவர்கள், - அக்கிராசனாதிபதி.
2. மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L., M.L.C., —உப-அக்கிராசனாதிபதி.
3. ,, K. ராமையங்காரவர்கள், B.A., B.L.,
4. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியாரவர்கள், B.A., B.L.
5. ,, செ. மு. செய்யிது முஹம்மது ஆலிம் புலவரவர்கள்.
6. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
7. ,, V. சுந்தரமையரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1935-ஆம்ஃ ஜூன்மீ முதல் ஆகஸ்டுமீ முடிய உள்ள வரவுசெலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. சங்கத்தின் திரவியசம்பந்தமான நிலைமையைப்பற்றி எழுதிய ஆபீஸ் மெமோ ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டதில், சங்கத்துக்காகச் சந்தாத் தொகைகள் வசூலிக்க முயற்சிகள்செய்யவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

III. சங்கக் கட்டிடவேலைகள் முழுதும் செய்து பூர்த்தியாகிக் கண்டிராக்டர்களுக்குச் செல்லவேண்டிய தொகைகள் முழுதும் செலுத்தப்பெற்றுக் கணக்குத்தீர்ந்ததுசம்பந்தமாக எழுதிய ஆபீஸ் மெமோ ரிக்கார்டுசெய்யலாயிற்று.

IV. சிதம்பரம் அண்ணாமலை ஸருவகலாசாலை ஸெனேட்டுக்குச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரைத் தெரிந்தெடுத்தனுப்பவேண்டுமென்று எழுதியனுப்பியுள்ள கடிதத்தைச் சங்கத்தின் வருஷோத்ஸவ மஹாசபைக்கூட்டத்தில் ஆலோசனைக்குவைக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

V. சங்க வருஷோத்ஸவம் நடத்துவதற்கு அக்கிராசனர் ஒருவரைத் தெரிந்தெடுத்துத் தேதியும் குறிப்பிடவேண்டுமென்று மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

VI. சங்கம் அச்சாபீசு Foreman S. நாராயணராவுக்கு மாதச்சம்பளம் ரூ 19லிருந்து ரூ 22—8—0-க்கு உயர்த்தப்படவேண்டுமென்று ஆபீஸ் மெமோவில் கண்டபடி சாங்கிஷன் செய்யலாயிற்று.

மதுரை.
21—9—'35.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.